DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.95/2018**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.2

Defence

Court

Name : மருது
Father/ Husband Name : கருமலையான்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 20.11.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தற்போது புதுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.02.2016ம் தேதி காலை 08.00 மணிக்கு திருவேகம்பத்தூர் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 சாந்தா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று குற்ற எண்: 10/2018 இ.த.ச.பிரிவுகள்: 392ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3).** மேல் விசாரணைக்காக வழக்குக் கோப்பை காவல் ஆய்வாளர் பார்வைக்கு அனுப்பிவைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 என்னிடம் கொடுத்த புகார் மனுவில தாலிச்செயினை அத்துச்சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தங்கச்செயின் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தாலிச்செயின் என்று

சொல்லவில்லை. அ.சா.1ன் கழுத்தில் இரத்தக்காயம் இருந்ததாகவோ, மருத்துவமனையில் அதற்கு சிகிச்சை எடுத்துகொண்டதாகவோ புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 6 நாட்கள் கழித்து தான் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை. புகார் மனுவை பெற்ற உடனேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவீட்டேன். அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.